www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

10 ஆம் வகுப்பு

# அரசு பொதுத்தேர்வு - ஏப்ரல் 2025

Part - III

பதிவு எண்.

## சமூக அறிவியல் (விடைகளுடன்)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறைபாடு இருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** இவ்வினாத்தாள் **நான்கு** பகுதிகளைக் கொண்டது.

### பகுதி - I

**குறிப்பு:** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) கொடுக்கப்பட்ட **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**(14 × 1 = 14)**

**1.** பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந் தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?

(அ) சீனா (ஆ) ஜப்பான்
(இ) கொரியா (ஈ) மங்கோலியா

**2.** இத்தாலி யாருடன் லேட்ரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?

(அ) ஜெர்மனி (ஆ) ரஷ்யா
(இ) போப் (ஈ) ஸ்பெயின்

**3.** வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம் எந்த ஆண்டு ஒன்று சேர்க்கப்பட்டது?

(அ) 1975 (ஆ) 1976
(இ) 1973 (ஈ) 1974

**4.** **கூற்று** : ஜோதிபா புலே ஆதரவற்றோருக்கான விடுதிகளையும், விதவைகளுக்கான காப்பகங்களையும் திறந்தார்.

**காரணம்** : ஜோதிபா புலே குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவை மறுமணத்தை ஆதரித்தார்.

(அ) கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக இல்லை.

(ஆ) கூற்று சரி. காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக உள்ளது.

(இ) இரண்டுமே தவறு

(ஈ) காரணம் சரி. ஆனால் கூற்று பொருத்தமற்றதாக உள்ளது.

**5.** சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் எந்த பின்னணியில் நிறைவேற்றப்பட்டது?

(அ) கோல் கிளர்ச்சி
(ஆ) இண்டிகோ கிளர்ச்சி
(இ) முண்டா கிளர்ச்சி
(ஈ) தக்காண கலவரங்கள்

**6.** இந்தியாவின் காலநிலை .................. ஆக பெயரிடப்பட்டுள்ளது.

(அ) அயனமண்டல ஈரக் காலநிலை
(ஆ) நிலநடுக்கோட்டுக் காலநிலை
(இ) அயனமண்டல பருவக்காற்றுக் காலநிலை
(ஈ) மித அயனமண்டலக் காலநிலை

**7.** ................ என்பது ஒரு வாணிபப் பயிர்.

(அ) பருத்தி (ஆ) கோதுமை
(இ) அரிசி (ஈ) மக்காச்சோளம்

**8.** இந்தியாவின் முதல் அணுமின் நிலையம் நிறுவப்பட்ட மாநிலம் :

(அ) குஜராத் (ஆ) இராஜஸ்தான்
(இ) மகாராஷ்டிரம் (ஈ) தமிழ்நாடு

**9.** மக்கள் தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு .............. .

(அ) வரைபடவியல் (ஆ) மக்களியல்
(இ) மானுடவியல் (ஈ) கல்வெட்டியல்



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**10.** தமிழ்நாட்டு மக்களின் இரண்டாவது முக்கிய உணவுப்பயிர் :

(அ) பருப்பு வகைகள்

(ஆ) சிறுதானியங்கள்

(இ) எண்ணெய் வித்துக்கள்

(ஈ) நெல்

**11.** கீழ்க்காணும் மாநிலங்களில் எந்த ஒன்று ஈரவை சட்ட மன்றத்தைப் பெற்றிருக்கவில்லை?

(அ) ஆந்திரப் பிரதேசம்

(ஆ) தெலுங்கானா

(இ) தமிழ்நாடு

(ஈ) உத்திரப் பிரதேசம்

**12.** ஒபெக் (OPEC) என்பது :

(அ) சர்வதேச காப்பீட்டு நிறுவனம் (ஆ) ஒரு சர்வதேச விளையாட்டுக் கழகம்

(இ) எண்ணெய் ஏற்றுமதி நிறுவனங்களின் அமைப்பு

(ஈ) ஒரு சர்வதேச நிறுவனம்

**13.** ................. முறையில் ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டும்போது, இறுதி பண்டத்தின் மதிப்பை கணக்கிடலாம்

(அ) செலவு முறை (ஆ) மதிப்பு கூட்டு முறை

(இ) வருமான முறை (ஈ) நாட்டு வருமானம்

**14.** இந்தியா எப்போது டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டது?

(அ) 1984 (ஆ) 1976

(இ) 1950 (ஈ) 1994

## பகுதி - II

**குறிப்பு :** **எவையேனும்** 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 28-க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **(10 × 2 = 20)**

**15.** சீன-ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?

**16.** பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியது?

**17.** பாளையக்காரர்களின் கடமைகள் யாவை?

**18.** வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளை பட்டியலிடவும்.

**19.** இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் அன்னிபெசன்ட்டின் பங்களிப்பு யாது?

**20.** தக்காண பீடபூமி – சிறு குறிப்பு வரைக.

**21.** இந்தியாவின் நான்கு பருவக் காலங்களைக் குறிப்பிடுக.

**22.** இந்தியாவின் வேளாண்மை முறைகளைக் குறிப்பிடுக.

**23.** தமிழ்நாட்டின் முக்கிய தீவுகளைக் குறிப்பிடுக.

**24.** தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்கு திட்டங்களின் பெயர்களை எழுதுக.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**25.** உயர் நீதிமன்றத்தின் தனக்கே உரிய நீதிவரையறை அதிகாரங்கள் யாவை?

**26.** அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள் யாவர்?

**27.** FAO - வின் படி உணவு பாதுகாப்பை வரையறு.

**28.** ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் குறித்து நீவிர் அறிவது யாது?

## பகுதி - III

குறிப்பு : **எவையேனும்** 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 42-க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **(10 × 5 = 50)**

**29.** கோடிட்ட இடங்களை நிரப்புக.

(i) கட்டபொம்மன் ........... என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்டார்.

(ii) காந்தியடிகளின் அரசியல் குரு ............ ஆவார்.

(iii) ............ தமிழ்நாட்டின் மாநில விலங்கு ஆகும்.

(iv) இந்திய குடிமக்களுக்கு அடிப்படை கடமைகள் ............. பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

(v) இரண்டாம் துறையை வேறுவிதமாக .............. துறை என அழைக்கலாம்.

**30.** ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துகளை கோடிட்டுக் காட்டுக.

**31.** இரண்டாம் உலகப் போரின் விளைவுகளை ஆய்வு செய்க.

**32.** (அ) வேறுபடுத்துக.

(i) வடகிழக்கு பருவக்காற்று மற்றும் தென்மேற்கு பருவக்காற்று.

(ii) புதுப்பிக்க இயலும் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்.

(ஆ) காரணம் கூறுக.

மலைப் பகுதிகள் சமவெளிகளை விட குளிரானவை.

**33.** பெண்களின் மேம்பாட்டிற்கு 19 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து எழுதுக.

**34.** தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரிக்கவும்.

**35.** இந்திய மண் வகைகள் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிட்டு, அதன் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.

**36.** தமிழ்நாட்டின் பல்வேறு போக்குவரத்து முறைகளை விவரி.

**37.** இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?

**38.** இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.

**39.** நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி.

**40.** வரி என்றால் என்ன? அதன் வகைகளை விவரிக்கவும்.

**41.** கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக:

1910 முதல் 1940 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட இந்திய தேசிய இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை காலக்கோட்டில் எழுதுக.

www.Padasalai.Net

**42.** உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.

(i) இத்தாலி

(ii) பசிபிக் பெருங்கடல்

(iii) பிரான்ஸ்

(iv) செர்பியா

(v) ஜப்பான்

**பகுதி - IV**

**குறிப்பு :** பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். **(2 × 8 = 16)**

**43.** (அ) காந்திய இயக்கத்தின் ஒரு சிறந்த உதாரணமான சட்ட மறுப்பு இயக்கம் குறித்து விரிவாக ஆராயவும்.

**(அல்லது)**

(ஆ) நீதிக்கட்சியின் தோற்றத்திற்கான பின்புலத்தை விளக்கி சமூகநீதிக்கான அதன் பங்களிப்பைச் சுட்டிக் காட்டவும்.

**44.** (அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.

(i) மேற்கு தொடர்ச்சி மலை

(ii) தக்காண பீடபூமி

(iii) பன்னா உயிர்க்கோள பெட்டகம்

(iv) கங்கை ஆறு

(v) கரிசல் மண் பகுதி

(vi) மேட்டூர் அணை

(vii) பன்னாட்டு விமானநிலையம் (ஏதேனும் ஒன்று).

(viii) பெட்ரோலியம் கிடைக்குமிடம்.

(அல்லது)

(ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்.

(i) காவிரி ஆறு

(ii) நீலகிரி

(iii) கோடியக்கரை வனவிலங்கு சரணாலயம்

(iv) பழவேற்காடு ஏரி

(v) விமான நிலையம் (ஏதேனும் ஒன்று)

(vi) கரும்பு விளையும் பகுதி

(vii) நிலக்கரி கிடைக்குமிடம் (ஏதேனும் ஒன்று)

(viii) இந்தியப் பெருங்கடல்

## விடைகள்

**பகுதி - I**

**1.** (ஆ) ஜப்பான்

**2.** (இ) போப்

**3.** (ஆ) 1976

**4.** (அ) கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக இல்லை

**5.** (இ) முண்டா கிளர்ச்சி

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**6.** (இ) அயனமண்டல பருவக்காற்றுக் காலநிலை

**7.** (அ) பருத்தி

**8.** (இ) மகாராஷ்டிரம்

**9.** (ஆ) மக்களியல்

**10.** (ஆ) சிறுதானியங்கள்

**11.** (இ) தமிழ்நாடு

**12.** (இ) எண்ணெய் ஏற்றுமதி நிறுவனங்களின் அமைப்பு

**13.** (ஆ) மதிப்பு கூட்டு முறை

**14.** (ஈ) 1994

## பகுதி - II

**15.** (i) 1894-இல் ஜப்பான் சீனாவின் மீது வலுக்கட்டாயமாக ஒரு போரை நடத்தியது.

(ii) இப்போரில் சிறிய நாடான ஜப்பான் வெற்றிபெற்று உலகை வியக்க வைத்தது.

(iii) தொடர்ந்து ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் எச்சரிக்கையை மீறி ஜப்பான் லியோடங் தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் சேர்த்து இணைத்துக் கொண்டது.

(iv) இதனால் கிழக்கு ஆசியாவில் தானே வலிமை மிகுந்த அரசு என ஜப்பான் மெய்ப்பித்தது.

**16.** (i) பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மைக்கும் உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கும் மரண அடியைக் கொடுத்தது.

(ii) வேளாண் உற்பத்திப் பொருட்களின் விலை பாதியாகக் குறைந்தது. ஆனால் அரசுக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய பணம் இரண்டு மடங்காயிற்று.

(iii) விலைவாசியில் ஏற்பட்ட மிகப்பெரும் வீழ்ச்சி இந்திய தேசியவாதிகளை உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் கோரிக்கையை வைக்கத் தூண்டியது.

**17.** (i) வரிவசூலித்தல் (ii) நிலப்பகுதிகளை நிர்வகித்தல்

(iii) வழக்குகளை விசாரித்தல் (iv) சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தல்

(v) அவர்களின் காவல் காக்கும் கடமை படிக்காவல் என்றும் அரசுக்காவல் என்றும் அழைக்கப்பட்டது.

**18.** (i) சதாரா (ii) சம்பல்பூர் (iii) பஞ்சாபின் சில பகுதிகள்

(iv) ஜான்சி (v) நாக்பூர்

**19.** (i) 1916இல் அன்னிபெசன்ட் தன்னாட்சி இயக்கத்தை தொடங்கினார்.

(ii) இவர் அகில இந்திய அளவில் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையை முன் வைத்தார்.

(iii) நியூ இந்தியா, காமன் வீல் எனும் இரண்டு செய்தித்தாள்களைத் தொடங்கினார்.

(iv) 'விடுதலை பெற இந்தியா எப்படித் துயருற்றது' மற்றும் இந்தியா: ஒரு தேசம் எனும் இரண்டு புத்தகங்களையும் வெளியிட்டார்.

**20.** தக்காண பீடபூமி, தீபகற்ப பீடபூமியில் அமைந்துள்ள மிகப்பெரிய இயற்கை அமைப்பைக் கொண்டதாகும். இது தோராயமாக முக்கோண வடிவம் கொண்டது.

**இதன் எல்லைகள்:**

(i) வடமேற்கு – விந்திய, சாத்பூரா மலைத் தொடர்கள்

(ii) வடக்கு – மகாதேவ், மைக்காலா குன்றுகள்

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(iii) வடகிழக்கு – இராஜ்மகால் குன்றுகள்

(iv) மேற்கு – மேற்கு தொடர்ச்சி மலைகள்

(v) கிழக்கு – கிழக்கு தொடர்ச்சி மலைகள்

**21.** (i) குளிர்காலம் – ஜனவரி, பிப்ரவரி

(ii) கோடைக்காலம் – மார்ச் முதல் மே வரை

(iii) தென்மேற்குப் பருவக்காற்று காலம் – ஜுன் முதல் செப்டம்பர் வரை.

(iv) வடகிழக்குப் பருவக்காற்று காலம் – அக்டோபர் முதல் டிசம்பர் வரை.

**22.** (i) தன்னிறைவு வேளாண்மை (ii) இடப்பெயர்வு வேளாண்மை

(iii) தீவிர வேளாண்மை (iv) வறண்ட நிலவேளாண்மை

(v) கலப்பு வேளாண்மை (vi) படிக்கட்டுமுறை வேளாண்மை

**23.** பாம்பன், முயல்தீவு, குருசடை தீவு, நல்லதண்ணி தீவு, புள்ளி வாசல், ஸ்ரீரங்கம், உப்புத்தண்ணித் தீவு, தீவுத்திடல், காட்டுப்பள்ளித் தீவு, குவிப்பில் தீவு மற்றும் விவேகானந்தர் நினைவுப் பாறை ஆகும்.

**24.** (i) மேட்டூர் அணை (ii) அமராவதி அணை (iii) சாத்தனூர் அணை

(iv) பவானிசாகர் அணை (v) கிருஷ்ணகிரி அணை (vi) வைகை அணை.

**25.** (i) முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள், உயில், திருமணம் சார்ந்த வழக்குகள் மற்றும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் ஆகியவற்றை மட்டும் நேரடியாக விசாரிக்கும் அதிகாரங்களை இவை பெற்றுள்ளன.

(ii) தன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ரூபாய் 2000 மற்றும் அதற்கு மேற்பட்ட தொகை மதிப்புடைய குற்றவியல் வழக்குகளை விசாரிக்கிறது.

**26.** ஜவகர்லால் நேரு, டிட்டோ, நாசர், சுகர்னோ மற்றும் குவாமே நிக்ரூமா.

**27.** "எல்லா மக்களும், எல்லா நேரங்களிலும், போதுமான, பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுக்கான உடல், சமூக மற்றும் பொருளாதார அணுகுமுறையை கொண்டிருக்கும் போது, அவர்களின் உணவுத் தேவைகளையும், சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உணவு விருப்பங்களையும் பூர்த்தி செய்வதில் உணவுப் பாதுகாப்பு இருக்கிறது."

**28.** (i) ஸ்டார்ட்அப் இந்தியா திட்டம் என்பது இந்திய அரசின் ஒரு முன்முயற்சித் திட்டமாகும்.

(ii) இதன் முதன்மையான நோக்கம் தொழில் தொடங்குவதற்கான தொடக்க முயற்சிகளை ஏற்படுத்துதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் வளங்களை உருவாக்குதல் ஆகும்.

## பகுதி - III

**29.** (i) கயத்தாறு

(ii) கோபால கிருஷ்ண கோகலே

(iii) நீலகிரி வரையாடு

(iv) 51 A

(v) தொழில்

**30.** (i) போலந்து மீண்டும் உருவாக்கப்பட்டது.

(ii) அல்சேஸ்-லொரைன் பகுதிகள் பிரான்சுக்குத் திருப்பித் தரப்பட்டன.

(iii) ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய இரண்டின் ஒருங்கிணைப்பு தடை செய்யப்பட்டது.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(iv) சிறிய கப்பற்படை ஒன்றை மட்டுமே வைத்துக்கொள்ள ஜெர்மனி அனுமதிக்கப்பட்டது.

(v) ஜெர்மன் படை 1,00,000 வீரர்களை மட்டுமே கொண்டதாக அளவில் சுருக்கப்பட்டது.

(vi) ஜெர்மனியின் அனைத்துக் காலனிகளும் பன்னாட்டுச் சங்கத்தின் பாதுகாப்பு நாடுகளாக ஆக்கப்பட்டன.

(vii) போரைத் தொடங்கிய குற்றத்திற்காக ஜெர்மனி இழப்பீடு வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

(viii) பிரெஸ்ட் – லிடோவஸ்க் உடன்படிக்கையையும் புகாரெஸ்ட் உடன்படிக்கையையும் திரும்பப் பெற்றுக் கொள்ள ஜெர்மனி வற்புறுத்தப்பட்டது.

**31.** இரண்டாம் உலகப்போர் 1939-ல் தொடங்கி 1945-ல் முடிந்தது. இரண்டாம் உலகப்போர் நவீனமான போராகும். இந்தப் போரில் இராணுவத்தினரும் பொதுமக்களும் மிக அதிக அளவில் உயிரிழந்தனர்.

**உலகம் இரு அணிகளாகப் பிரிதல் :** வல்லரசுகளின் தலைமையில் உலகம் இரு அணியாக பிரிந்தது.

(i) அமெரிக்காவின் தலைமையில் (கம்யூனிச எதிர்ப்புக் கருத்துக்களைக் கொண்டவர்கள்)

(ii) சோவியத் யூனியனின் தலைமையில் (கம்யூனிச கருத்துக்களைக் கொண்டவர்கள்),

(iii) ஐரோப்பா கம்யூனிச நாடுகள், கம்யூனிசமல்லாத நாடுகள் என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

**அணு ஆயுதப் பரவல் :**

(i) அமெரிக்க ஐக்கிய நாடுகளும் சோவியத் யூனியனும் அணு ஆயுதங்களை அதிகரிக்கும் போட்டியில் இறங்கி, ஆயுதங்களைப் பெருக்கி குவித்தன.

(ii) பல நாடுகளில் இராணுவத்திற்கான செலவினங்கள் உச்சத்தை எட்டின.

**பன்னாட்டு முகமைகள் :** பல பன்னாட்டு முகமைகள் குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி, பன்னாட்டு நிதியம் போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டன.

**காலனியாதிக்க நீக்கம் :**

(i) காலனியாதிக்கச் சக்திகள் தங்களது காலனிகளுக்கு விடுதலை வழங்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாயினர்.

(ii) அதில் இந்தியா முதலில் சுதந்திரம் பெற்றது.

**32.** அ) **(i)**

| வ. எ. | வடகிழக்கு பருவக் காற்று | தென்மேற்கு பருவக் காற்று |
|---|---|---|
| (i) | இதன் காலம் அக்டோபர் முதல் டிசம்பர் வரை. | இதன் காலம் ஜுன் முதல் செப்டம்பர் வரை. |
| (ii) | இது நிலத்திலிருந்து வங்காள விரிகுடாவை நோக்கி வீசுகிறது. | இது கடலில் இருந்து நிலத்தை நோக்கி வீசுகிறது. |
| (iii) | இது ஆந்திரா, கேரளா, தென் கர்நாடகாவின் உட்பகுதிகள் மற்றும் தமிழ்நாட்டிற்கும் குளிர்காலத்தில் நல்ல மழையைத் தருகிறது. | இக்காற்று இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதிக்கும் மற்றும் அநேக பகுதிகளுக்கும் நல்ல மழையைக் கொடுக்கிறது. |

**(ii)**

| | புதுப்பிக்க இயலும் வளங்கள் | புதுப்பிக்க இயலா வளங்கள் |
|---|---|---|
| (i) | பயன்பாட்டிற்குப் பிறகு இயற்கை முறையில் மீட்டுருவாக்கம் செய்து கொள்ளும் வளங்கள் புதுபிக்கக் கூடிய வளங்கள் ஆகும். | பயன்பாட்டிற்குப் பிறகு மீண்டும் மீட்டுருவாக்கம் செய்ய இயலா வளங்கள் புதுப்பிக்க இயலா வளங்கள் ஆகும். |

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| (ii) | சூரிய ஆற்றல், காற்று சக்தி, உயிரி சக்தி ஓத மற்றும் அலை சக்தி போன்றவை புதுப்பிக்கக்கூடியவை. | நிலக்கரி, பெட்ரோல், இயற்கை வாயு போன்றவை புதுப்பிக்க இயலாத வளங்கள் ஆகும். |

ஆ) **காரணம் :** புவிப்பரப்பில் இருந்து உயரே செல்லச் செல்ல வெப்பநிலை குறைகிறது. வளிமண்டலத்தில் ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கும் 6.5°C என்ற அளவில் வெப்பநிலை குறைகிறது.

**33. இராஜாராம் மோகன் ராய் :**

(i) விதவைப் பெண்கள் மறுமணம் செய்து கொள்ள உரிமை உடையவர்கள் என்ற கருத்தை முன்வைத்தார். பலதார மணத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினார்.

(ii) அவருடைய செயல்களின் விளைவாக தலைமை ஆளுநர் வில்லியம் பெண்டிங் 1829இல் சதி எனும் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை ஒழித்து சட்டம் இயற்றினார்.

(iii) இராஜாராம் மோகன்ராய் பெண்ணடிமைத்தனத்தைக் கண்டனம் செய்தார். ஆணைவிட பெண் கீழானவள் என்ற நடைமுறைக் கருத்தை எதிர்த்தார். பெண்களுக்கு கல்வி வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தை வலுவாக முன்வைத்தார்.

**ஈஸ்வர சந்திர வித்யாசாகர் :**

(i) இவர் பலதார மணத்தையும், குழந்தை திருமணத்தையும் எதிர்த்தார்.

(ii) பெண்கல்வியை மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றிய அவர் பல பெண்கள் பள்ளிகள் நிறுவப்பட உதவினார். இந்து சமூகத்தில் குழந்தை விதவைகளின் வாழ்வை மேம்படுத்துவதற்காகவே தனது வாழ்வை அர்ப்பணித்தார்.

(iii) அவருடைய இயக்கத்தின் விளைவாக 1856-இல் மறுமண சீர்திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது.

**M.G. ரானடே :**

நீதிபதியாகிய M.G. ரானடே சாதி மறுப்பு, சமபந்தி, சாதி மறுப்புத் திருமணம், விதவை திருமணம், பெண்கள் முன்னேற்றம் போன்றவற்றிற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

**ஜோதிபா பூலே :**

(i) இவர் குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவை மறுமணத்தை ஆதரித்தார்.

(ii) ஜோதிபாவும் அவரது மனைவி சாவித்திரிபாயும் பெண்களின் முன்னேற்றத்திற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தனர்.

(iii) பெற்றோரில்லா குழந்தைகளுக்கென்று விடுதிகளையும் விதவைகளுக்கென காப்பகங்களையும் உருவாக்கினார்.

**தயானந்த சரஸ்வதி :**

இவர் குழந்தைத் திருமணத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தார். விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார்.

**34.** (i) தென் இந்தியாவில் பாயும் ஆறுகள் தீபகற்ப ஆறுகள் எனப்படுகின்றன. பெரும்பாலான ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன.

(ii) இவை பருவகால ஆறுகள் அல்லது வற்றும் ஆறுகள் எனப்படும்.

**கிழக்கு நோக்கிப் பாயும் ஆறுகள் :**

**மகாநதி** : மகாநதி சத்தீஸ்கார் மாநிலத்திலுள்ள சிகாவிற்க்கு அருகில் உற்பத்தியாகி ஒடிசா மாநிலத்தின் வழியாக பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

**கோதாவரி** : தீபகற்ப இந்தியாவில் பாயும் நதிகளில் மிக நீளமானது. இந்நதி விருத்தகங்கா என்றும் அழைக்கப்படுகிறது. இது மேற்குத் தொடர்ச்சி மலையில் நாசிக் மாவட்டத்தில் உற்பத்தியாகி



www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



வங்காள விரிகுடாவில் கலக்கிறது. கோதாவரி டெல்டா பகுதியில் நன்னீர் ஏரியான கொல்லேறு ஏரி அமைந்துள்ளது.

**கிருஷ்ணா** : இந்நதி மேற்குத் தொடர்ச்சி மலையில் மகா பலேஷ்வர் என்ற பகுதியில் உருவாகி வங்காள விரிகுடாவில் கலக்கிறது. இது தீபகற்ப இந்திய நதிகளில் இரண்டாவது பெரிய நதியாகும். இதன் நீளம் சுமார் 1400 கி.மீ. பீமா, முசி, துங்கபத்திரா மற்றும் பெடவாறு ஆகியவை இதன் முக்கிய துணை ஆறுகளாகும்.

**காவேரி :**

(i) காவிரி ஆறு கர்நாடக மாநிலத்தில் குடகு மலையிலுள்ள தலைக்காவிரியில் உற்பத்தியாகி பாய்கிறது.

(ii) இது தென்இந்தியாவில் கங்கை என்றும் அழைக்கப்படுகிறது. கர்நாடகாவில் இரண்டாகப் பிரிந்து சிவசமுத்திரம் மற்றும் ஸ்ரீரங்கப்பட்டினம் ஆகிய ஆற்றுத் தீவுகளை உருவாக்குகிறது.

**மேற்கு நோக்கி பாயும் ஆறுகள் :**

**நர்மதை** : மத்தியப்பிரதேசத்தில் உள்ள அமர்கண்டாக் பீடபூமியில் பகுதியில் உற்பத்தியாகிறது. இது மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளில் நீளமானது ஆகும். இந்த நதி காம்பே வளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது.

**தபதி** : இந்நதி மத்தியப்பிரதேசத்திலுள்ள முல்டாய் என்ற இடத்தில் உற்பத்தியாகிறது. இதுவும் காம்பே வளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது.

**35.** (i) **வண்டல் மண்**

- **உருவாக்கம்** : சிற்றோடைகள் மற்றும் ஆறுகளின் வேகம் குறையும் பொழுது படிய வைப்பதினால் உருவாகின்றன.
- **வேதியியல் பண்புகள்** : பொட்டாசியம், பாஸ்போரிக் அமிலம், சுண்ணாம்பு மற்றும் கார்பன் கலவைகள் அதிகமாக காணப்படுகின்றன. நைட்ரஜன் குறைவாக உள்ளது.
- **பரவல்** : கங்கை, பிரம்மபுத்திரா ஆற்றுப்பள்ளதாக்குகள், உத்தரப்பிரதேசம், உத்தரகாண்ட், பஞ்சாப், ஹரியானா, மேற்கு வங்காளம், பீகார் சமவெளிப்பகுதிகள்.

(ii) **கரிசல் மண்**

- **உருவாக்கம்** : தக்காணப் பகுதியில் உள்ள பசால்ட் பாறைகளில் இருந்து உருவானது.
- **வேதியியல் பண்புகள்** : கால்சியம், மக்னீசியம், கார்பனேட்டுகள், அதிக அளவு இரும்பு, அலுமினியம், சுண்ணாம்பு மற்றும் மாங்கனீசு ஆகியன காணப்படுகின்றன. நைட்ரஜன், பாஸ்போரிக் அமிலம் மற்றும் இலைமக்குகள் குறைவாக உள்ளன.
- **பரவல்** : மகாராஷ்டிரா, மாளவப்பீடபூமி, கத்தியவார், தீபகற்பம், தெலங்கானா, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகத்தின் வடபகுதி.

(iii) **செம்மண்**

- **உருவாக்கம்** : பழமையான படிகபாறைகள் சிதைவடைவதால் உருவாகிறது.
- **வேதியியல் பண்புகள்** : இரும்பு மற்றும் மக்னீசியம் அதிகமாகக் காணப்படுகிறது. நைட்ரஜன், இலைமட்குகள், பாஸ்போரிக் அமிலம் மற்றும் சுண்ணாம்புச் சத்துக்கள் குறைவாகக் காணப்படுகின்றன.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



- **பரவல்** : கிழக்கு தக்காணப்பீடபூமி, கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா, சோட்டாநாகபுரி பீடபூமி, ஜார்க்கண்ட்

(iv) **சரளை மண்**

- **உருவாக்கம்** : வெப்பம் மற்றும் குளிர் அடுத்தடுத்து நிகழும்போது மண்சுவரல் காரணமாக உருவாகிறது.
- **வேதியியல் பண்புகள்** : இரும்பு மற்றும் அலுமினியத்தின் நீரேற்ற ஆக்சைடுகளால் உருவானது.
- **பரவல்** : அசாம் குன்றுகள், கேரளா, கர்நாடக மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரப்பகுதிகள், ஒடிசா மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகள்.

(v) **காடு மற்றும் மலைமண்**

- **உருவாக்கம்** : பனிமழை, வெப்பநிலை வேறுபாடுகளால் பௌதீக சிதைவின் காரணமாக உருவாகிறது.
- **வேதியியல் பண்புகள்** : பொட்டாஷ், பாஸ்பரஸ் மற்றும் சுண்ணாம்புச் சத்துக்கள் குறைவாகக் காணப்படுகின்றன.
- **பரவல்** : ஜம்மு-காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம், உத்திரகாண்ட், சிக்கிம்.

**36. சாலை போக்குவரத்து :**

(i) மாநிலத்தின் மொத்த சாலைகளின் நீளம் 1,67,000 கி.மீ ஆகும். இதில் 60,628 கி.மீ மாநில நெடுஞ்சாலைத்துறை மூலம் பராமரிக்கப்படுகிறது.

(ii) தனியார் மற்றும் பொதுத்துறை கூட்டணி இயக்கத் திட்டத்தின் கீழ் 20 சதவீதம் சாலைகள் உள்ளன.

(iii) சாலைப் போக்குவரத்தில் இந்தியாவில் தமிழ்நாடு இரண்டாம் இடம் வகிக்கின்றது.

**இரயில்வே போக்குவரத்து :**

(i) தெற்கு இரயில்வேயின் தலைமையகம் சென்னையில் அமைந்துள்ளது.

(ii) தமிழ்நாட்டில் சிறந்த இரயில்வே வலைப்பின்னல் அமைப்பு உள்ளது,

(iii) சென்னையில் புறநகர் மற்றும் பறக்கும் தொடருந்துத் திட்டம் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது.

**வான்வழிப் போக்குவரத்து :**

(i) தமிழ்நாட்டில் நான்கு சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன. அவை, சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோயம்புத்தூரில் உள்ளன.

(ii) தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகியவை உள்நாட்டு விமான நிலையங்களாகும்.

**நீர்வழிப் போக்குவரத்து :**

(i) சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகியவை மூன்று முக்கிய துறைமுகங்கள் ஆகும். தமிழ்நாட்டில் 15 சிறிய துறைமுகங்கள் உள்ளன.

(ii) நாகப்பட்டினம் ஒரு இடைநிலை துறைமுகமாகும்.

(iii) சிறுதுறைமுகங்கள் தமிழ்நாட்டின் கடல்சார் வாரியத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

**37.** (i) பிரதம அமைச்சர், அமைச்சர்களின் நிலையை அறிந்து அவர்களுக்கு அரசின் பல்வேறு துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.

(ii) தான் தலைமை வகிக்கும் அமைச்சரவைக் கூட்டத்தின் தேதி, நிகழ்ச்சி நிரல் குறித்து முடிவு செய்வார்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(iii) காபினெட் அமைச்சரவைக் கூட்டம் நடைபெறாதபொழுது பிரதம அமைச்சர் தன் மூத்த சகாக்கள் இருவர் அல்லது மூவரை கலந்தாலோசிக்கலாம்.

(iv) பல்வேறு துறைகளின் பணிகளை மேற்பார்வையிடுகிறார்.

(v) நடுவண் அரசின் விவகாரங்கள் மற்றும் சட்டத்திற்கான முன்மொழிவுகள் போன்ற அமைச்சரவையின் அனைத்து முடிவுகளையும் குடியரசுத் தலைவருடன் விவாதிக்கிறார்.

(vi) பிரதம அமைச்சர் குடியரசுத் தலைவருக்கும், அமைச்சரவைக்கும் இடையே பாலமாக செயல்படுகிறார்.

(vii) பிரதம அமைச்சர் நாட்டின் உண்மையான தலைவராவார். அவர் நாட்டின் முக்கிய செய்தித் தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.

(viii) சர்வதேச மாநாடுகளான, காமன்வெல்த், அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு, சார்க் நாடுகளின் மாநாடு ஆகியவற்றில் இவரே இந்திய நாட்டின் பிரதிநிதியாகப் பங்கு கொள்கிறார்.

**38.** (i) உலகிலுள்ள எழுதப்பட்ட, அனைத்து அரசியலமைப்புகளைவிட மிகவும் நீளமானது.

(ii) இதன் பெரும்பாலான கருத்துகள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை.

(iii) இது நெகிழாத்தன்மை கொண்டதாகவும், நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.

(vi) கூட்டாட்சி முறை அரசாங்கத்தை ஏற்படுத்துகிறது.

(v) இந்தியாவைச் சமயச்சார்பற்ற நாடாக்குகிறது.

(vi) சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.

(vii) 18-வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் வாக்குரிமை வழங்குகிறது.

**39.** (i) **மொத்த நாட்டு உற்பத்தி** (GNP) :

மொத்த நாட்டு உற்பத்தி என்பது, "அந்த நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் மதிப்பைக் குறிக்கும்".

(ii) **மொத்த உள்நாட்டு உற்பத்தி** (GDP) :

"ஓர் ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் மொத்த மதிப்பாகும்".

(iii) **நிகர நாட்டு உற்பத்தி** (NNP) :

மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும்.

நிகர நாட்டு உற்பத்தி (NNP) = மொத்த நாட்டு உற்பத்தி (GNP) – தேய்மானம்.

(iv) **நிகர உள்நாட்டு உற்பத்தி** (NDP) :

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பகுதியாகும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தைக் கழித்து பின் கிடைப்பதாகும்.

நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) = மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – தேய்மானம்.

(v) **தலா வருமானம்** (PCI) :

நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுப்பதன் மூலம் தலா வருமானம் கிடைக்கும்.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(vi) **தனிப்பட்ட வருமானம் (PI) :**

நேர்முக வரிவிதிப்பிற்கு முன் தனி நபர்கள் மற்றும் ஒரு நாட்டின் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்ற மொத்த பண வருமானத்தை தனிப்பட்ட வருமானம் எனலாம்.

(vii) **செலவிடத் தகுதியான வருமானம் (DI):**

- தனிநபர்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான வருமானத்தில் நுகர்வுக்கு செலவிடப்படுகின்ற வருமானத்தை செலவிடத் தகுதியான வருமானம் எனப்படுகிறது.
- DPI = தனிப்பட்ட வருமானம் – நேர்முகவரி

**40.** வரிகள் என்பவை எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி நேரடியாக அரசாங்கத்திற்கு செலுத்துகின்ற கட்டாய கட்டணமேயாகும்.

**வரியின் வகைகள் :**

1. **நேர்முக வரிகள் :**

- நேர்முக வரி என்பது ஒரு தனிநபர் அல்லது நிறுவனத்தின் மீது நேரடியாக விதிக்கப்படுவதாகும். இவ்வரியை மற்றவர் மீது மாற்ற முடியாது.
- யார் மீது வரி விதிக்கப்பட்டதோ அவரே அவ்வரியை செலுத்த வேண்டும்.

(i) **வருமான வரி :**

- இந்தியாவில் விதிக்கப்படுகின்ற நேர்முக வரிகளில் மிக முக்கியமான வரி வருமான வரி ஆகும்.
- தனிநபர் பெறுகின்ற வருமானத்தின் அடிப்படையில் இவ்வரி விதிக்கப்படுகின்றது. வரி வசூலிக்கப்படும் விகிதம் வருமான அளவைப் பொறுத்து மாறுபடும்.

(ii) **நிறுவன வரி :**

- இந்த வரி நிறுவனங்களுக்கு விதிக்கப்படுகிறது.
- மூலதன சொத்துகளின் விற்பனையிலிருந்து வரும் வட்டி இலாபங்கள், தொழில்நுட்ப சேவைகள் போன்றவற்றிலிருந்து வசூலிக்கப்படுகிறது.

(iii) **சொத்து வரி அல்லது செல்வ வரி :**

- தனது சொத்திலிருந்து பெறப்பட்ட நன்மைகளுக்காக சொத்தின் உரிமையாளருக்கு விதிக்கப்படுகின்ற வரியாகும்.
- ஒவ்வொரு ஆண்டும் சொத்தின் நடப்பு சந்தை மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது.

2. **மறைமுக வரிகள் :**

- ஒருவர் மீது விதிக்கப்பட்ட வரிச்சுமை மற்றொருவருக்கு மாற்றப்பட்டால் அது “மறைமுக வரி” எனப்படும்.
- வரி விதிக்கப்பட்டவர் ஒருவர். வரிச்சுமையை சுமப்பவர் வேறு ஒருவராவார்.

(i) **முத்திரைத்தாள் வரி :**

முத்திரைத்தாள் வரி என்பது அரசாங்க ஆவணங்களான திருமணப் பதிவு அல்லது சொத்து தொடர்பான ஆவணங்கள் மற்றும் சில ஒப்பந்தப் பத்திரங்கள் மீது விதிக்கப்படுகின்றது.

(ii) **பொழுதுபோக்கு வரி :**

எந்தவொரு பொழுதுபோக்கு மூலமாக இருந்தாலும், அதன் மீது அரசாங்கத்தால் விதிக்கப்படுகின்ற வரி பொழுதுபோக்கு வரியாகும். உதாரணமாக திரைப்படங்கள், பொழுதுபோக்குப் பூங்காக்கள், பொருட்காட்சி, விளையாட்டு நிகழ்ச்சிகள் ஆகியவற்றைப் பார்ப்பதற்காக விதிக்கப்படுகின்ற வரிகள்.

www.Padasalai.Net


www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(iii) **சுங்கத் தீர்வை :**

- உற்பத்தியின் இயக்கத்தில் உள்ள உற்பத்திப் பொருள்களின் மீது விதிக்கப்படும் வரி சுங்கத் தீர்வை எனப்படும்.
- இவ்வரி விற்பனை வரி போன்ற மறைமுக வரிகளுக்குக் கூடுதலாக விதிக்கப்படுகிறது

**41.**




**42.**




enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



## பகுதி - IV

**43. (அ) சட்டமறுப்பு இயக்கத்திற்கான அங்கீகாரம் :**

(i) 1929-இல் டிசம்பர் மாதம் லாகூரில் ஜவகர்லால் நேரு தலைமையில் காங்கிரஸ் அமர்வு நடந்தது.

(ii) அதில் முழுமையான சுதந்திரம் என்பது இலக்காக அறிவிக்கப்பட்டது.

(iii) இதற்கான சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்க இந்திய தேசிய காங்கிரஸ் காந்தியடிகளுக்கு அங்கீகாரம் அளித்தது.

**உப்புசத்தியாகிரகம் :**

(i) இர்வின் பிரபுவிடம் அளிக்கப்பட்ட கோரிக்கைகளில் முக்கியமானது உப்பு வரியை ரத்து செய்வதாகும்.

(ii) உப்பு மீதான வரியை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை ஒரு அறிவுப்பூர்வமான முடிவாகும்.

**தண்டியாத்திரை :**

(i) 1930 மார்ச் மாதம் 12ஆம் நாள் காந்தியடிகள் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டியாத்திரையைத் தொடங்கினார். இந்த யாத்திரையில் நூற்றுக்கணக்கானோர் சேரச்சேர அது நீண்டு கொண்டே போனது.

(ii) காந்திஜி 1930 ஏப்ரம் 5ஆம் நாள் மாலை தண்டி போய்ச் சேர்ந்தார்.

**உப்புச்சட்டத்தை மீறுதல் :**

(i) அடுத்தநாள் காலை ஒரு கைப்பிடி உப்பைக் கையில் எடுத்து உப்புச்சட்டத்தை மீறினார்.

(ii) இது ஒரு மிகப் பெரிய மக்கள் இயக்கமாக இருந்தபோதிலும் எங்கும் எந்தவித வன்முறையும் நிகழவில்லை.

(iii) தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியிலிருந்து வேதாரண்யம் வரை இதைபோன்ற ஒரு யாத்திரையை ராஜாஜி மேற்கொண்டார்.

**(அல்லது)**

(ஆ) **நீதிக்கட்சியின் தோற்றம் :**

(i) 1916 நவம்பர் 20இல் டாக்டர் நடேசனார், சர்.பிட்டி தியாகராயர், டி.எம்.நாயர் மற்றும் அலமேலுமங்கை தாயாரம்மாள் உட்பட 30 முக்கிய பிராமணர் அல்லாத தலைவர்கள் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை உருவாக்க ஒருங்கிணைந்தனர்.

(ii) தமிழில் திராவிடன், ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ், தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா ஆகிய பத்திரிக்கைகளை வெளியிட்டது.

(iii) நீதிக்கட்சி தேர்தலில் வெற்றி பெற்று இந்தியாவின் முதல் அமைச்சரவையை சென்னையில் அமைத்தது, A. சுப்பராயலு சென்னை மாகாணத்தின் முதலமைச்சரானார்.

**நீதிக்கட்சியின் பங்களிப்பு :**

(i) மக்கள் தொகையில் பெரும்பாலானவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை விரிவுப்படுத்தி அரசியல் தளத்தில் அவர்களுக்கென இடத்தை உருவாக்கியது.

(ii) சாதி மறுப்புத் திருமணங்களைக் கட்டுப்படுத்திய சட்டச்சிக்கல்களை நீதிக்கட்சியினர் அகற்றியதோடு பொதுக்கிணறுகளையும் நீர் நிலைகளையும் ஒடுக்கப்பட்ட பிரிவு மக்கள் பயன்படுத்துவதை தடுத்த தடைகளைத் தகர்த்தனர்.

(iii) ஒடுக்கப்பட்ட பிரிவு குழந்தைகள் பொதுப்பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென நீதிக்கட்சியின் அரசு ஆணை பிறப்பித்தது.

(vi) முதன் முதலாக தேர்தல் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை 1921இல் அங்கீகரித்தது.

(v) பல்வேறு சாதிகளையும் சமூகங்களையும் சார்ந்தவர்களுக்கு அரசுப் பணிகளில் சேர்வதற்கு சமமான வாய்ப்புகளை உறுதி செய்யும் பொருட்டு இரண்டு வகுப்புவாரி அரசாணைகள் இயற்றப்பட்டன.

(vi) 1926இல் இந்து சமய அறநிலையச் சட்டத்தை இயற்றியது.


(vii) அதன்படி எந்வொரு தனிநபரும், சாதிவேறுபாடின்றி கோவில்களின் நிருவாகக் குழுக்களில் உறுப்பினராகவும் கோவிலின் சொத்துக்களை நிர்வகிக்கவும் வழிவகை செய்யப்பட்டது.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**44. (அ)**





**(அல்லது)**

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(ஆ)




❖ ❖ ❖

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com